# பரிபாடல் காட்டும் இறைமை

***முனைவர் இரா. சி. சுந்தரமயில்***
***உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை***
***பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி***
***பீளமேடு, கோயம்புத்தூர்***

மனிதனைப் புனிதப்படுத்துவதும் உள்ளத்தைப் பக்குவப் படுத்துவதும் இறைவழிபாடே ஆகும். மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் அவர்களைப் பாவங்களில் இருந்து நீக்கிப் புனிதப்படுத்துவதற்குமே இறைமைந்தன் இயேசுபிரான் அவதரித்தார் என்கிறது வரலாறு. இறைமை என்பதற்குத் தெய்வத்தன்மை என்று அகராதி விளக்கம் தருகிறது. இறைஉணர்வு, பக்தி, வழிபாடு, நம்பிக்கை என இறை சார்ந்த அனைத்து செய்திகளும் இறைமைக்குள் அடங்கும் எனலாம். சங்க இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டது பரிபாடல். தெய்வத்தின் பெயரோடு பாடல்களைத் தொகுத்துத் தந்த ஒரே தொகைநூல் பரிபாடலே. திருமால், செவ்வேல் என்ற தலைப்புகளில் பதினான்கு பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே இவ்விலக்கியத்தில் இறைமை சார்ந்த செய்திகள் நிறைந்திருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

**பரிபாடல் சுருக்க விளக்கம்**

பரிந்து செல்லும் ஓசையை உடையது. பல வடிவம் பெற்று வருவது. பாவகைகளுக்கு இடம் கொடுப்பது. அக இலக்கணத்தைப் பரிபாடலில் கூறுதல் மரபு என்பார் தொல்காப்பியனார். அகமும் புறமும் சார்ந்த நூலான பரிபாடலும் இதன்படி அமையப்பெற்றதாகும். மொத்தம் எழுபது பாடல்கள் கொண்டது. கிடைக்கப்பெற்றவை இருபத்தி இரண்டு மட்டுமே. திருமால் - ஆறு, முருகன் - எட்டு, வையை - எட்டு. தவிர உரைநூல்களிலிருந்து கிடைக்கப்பெற்ற முழுமை பெறாத பாடல்கள் பதினொன்று என்பர். மன்னர்களின் நிலையான ஆட்சி இல்லாமையால் இந்நூல் படிப்பாரற்றும், பிழைகள் நிறைந்தும் காணப்பட்டது. பரிமேலழகரே முதன்முதலில் பிழைநீக்கி உரை எழுதினார் என்பர் சான்றோர். இதன் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரை ஆகும். கீரந்தையார், கடுவன்இளஎயினனார், நல்லெழுதியார், இளம்பெருவழுதி போன்ற புலவர்களால் பாடப்பட்ட திருமால், முருகன் குறித்த பதினான்கு பாடல்கள் மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**இயற்கை வடிவானவன்**

தாமரை மலர் போன்ற கண்களையும், காயாம் பூவைப் போன்ற மேனியையும் உடையவன் என்றெல்லாம் பலவாறாக இறைவனுடைய வடிவழகை வருணித்தாலும், இறைவனை இயற்கையோடு வைத்தெண்ணி வழிபட்டனர் என்பது பரிபாடல் வழி புலப்படுகிறது.

**வலன் உயர் எழிலியும் மாக விசும்பும்**
**நிலனும் நீடிய இமயமும் நீ** பா.எண் : 1(50-51)
**அமுக்கண் ஏர் வானத்து அணி நிலாத் திகழ்தரும்**
**தங்களும் தெறு கதிதக் கனலியும் நீ”** பா.எண் : 1(44-45)

மேலும், இயற்கையோடு இறைவனை ஒப்பிட்டும் கூறுகிறார். நீலமணிமேனி, தாமரை மலர் கண்கள், நாள் போன்ற வாய்மை, மேகத்தைப் போன்ற அருள் இன்னும் பிறவாக உவமித்துக் கூறுகிறார்.

**நிகரற்றவன்**

பல வடிவமாகவும், பலவற்றைப் போன்ற தோற்றத்தை உடையவனாகவும் இறைவனை வருணிக்கும் புலவர் ஒரு சூழ்நிலையில் பலவாறு உன்னை வருணித்தாலும், நீ எதற்கும் எதனோடும் நிகரற்றவன். நின் வரலாற்றை அறிதல் ஞானியற்கும் அரிது. நீ இத்தகையவன் என்று உரைத்தல் அடியவர்களுக்கும் அரிது என்று இறைவன் ஈடுஇணையில்லாதவன், நிகரற்றவன் என பறைசாற்றுகிறார். அவன் வடிவழகு எவற்றோடும் ஒப்பிட முடியாதது என்கிறார்

**தெருள நின் வரவு அறிதல்**
**மருள் அறு தேர்ச்சி முனைவக்கும் அரிதே**
**அன்ன மரபின் அனையோய் நின்னை**
**இன்னன் என்று உரைத்தல் எனக்கு எவன் எளிது" பா.எண் : 1(32-35)**

இத்தோடு நில்லாமல் அனைத்து உயிர்களுக்கும் தலைவனாக விளங்குபவன் நீ நின்னையே ஒக்கின்றாய் என்றும் எடுத்துரைக்கின்றார் புலவர்.

**எப்பொழுதும் எவ்விடத்தும்**

இறைவனானவன் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிலைத்து நிற்பவன். எக்காலத்திலும் இருப்பவன். நேற்று இருந்தான், இன்று இருக்கின்றான், நாளையும் இருப்பான். வெற்றிடங்களை நிரப்புபவன் மட்டுமல்ல, மன்னுயிர்களிடத்தும் மறைந்திருப்பவன் என இறைவனின் தன்மைகளை முன்னிலைப்படுத்துகிறார் புலவர் கீரந்தையார். மேலும், எல்லாப் பொருள்களின் உள்ளேயும் உறைந்திருப்பவன் என்றும் கூறுகிறார்.

**அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வும்**
**எவ்வயினோயும் நீயே பா.எண் : 2(58-59)**
**இந்நிலைத் தெரிபொருள் தேரின் இந்நிலை**
**நின்நிலைத் தோன்றும் நின் தொல்நிலைச் சிறப்பே பா.எண் : 2(26-27)**

தீ, காற்று, வான், நிலம், நீர் ஆகிய ஐம்பூதங்களும் ஞாயிறும், திங்களும், வேள்வித் தீயின் தலைவனும், கோள்கள் ஐந்தும் (செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி), இது போல் இன்னும் பிறவும், மூவேழ் உலகும், உயிரினங்களும் என இவை அனைத்தும் இறைவனிடத்தே தோன்றி வளர்ந்தன. இறைவனிடத்தே தோன்றி இறைவனிடத்தே முடிவடைவன என்கின்றார்.

**தீ, வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்**
**ஞாயிறும், திங்களும்,அறனும், ஐவரும்**
**திதியின் சிறாரும் விதியின் மக்களும்,**
**மாசு இல் எண்மரும்,பதினொரு கபிலரும்,**
**தா மா இருவரும், தருமனும், மடங்கலும்,**
**மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும்**
**மாயோய் நின்வயின் பரந்தவை பா.எண் : 3(6-10)**

**தானாய்த் தோன்றியவன்**

இறைவன் என்று தோன்றினான்? எங்கிருந்து உருப்பெற்றவன்? யாரிடத்துப் பிறந்தவன்? என்ற வரலாற்றை அறிய முற்பட்டோமானால், அறிதல் அரிது. ஏனெனில், அவன் தானாய் தோன்றியவன். ஊழியின் முதல்வன் இறைவன் என்கிறார் புலவர் கடுவன்இளஎயினனார். இறைவனுடைய வனப்பையும், பெருமையையும், எல்லையையும் ஆகமங்கலாலும், அகங்காரத்தாலும், மனத்தாலும், உணர்வாலும் மற்றும் யாவற்றாலும் அறிய முடியாது. தன்னை தானல்லாமல் பிறரால் உரைக்க ஒன்னாதவன் என்றும் இறைவனைப் பற்றி தன் பாடல் வழி விரிக்கின்றார்.

**நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ" பா.எண் : 3(46)**
**வலியினும் மனத்தினும் உணர்வினும் எல்லாம்**
**வனப்பு வரம்பு அறியா மரபினோயே பா.எண் : 3(49-50)**

என்றும் கூறுகின்றார். கடுவன்இளஎயினனார் திருமாலை 'காலமுதல்வன்' என்று வருணிக்கின்றார். ஊழியும் இறைவனே, ஊழியின் முதல்வனும் அவனே என்பதோடு மட்டுமல்லாமல் இறைவன் உறைதலும் இல்லை உறைவிடமும் அவனுக்கு இல்லை என்கிறார். முத்தொழிலை செய்வதற்காக நீ பிறவாத பிறப்பில்லை என்றாலும், உன்னைப் பிறப்பித்தோர் யாருமில்லை என்றும் வருணிக்கிறார்.

**உறையும் உறைவதும் இலையே: உண்மையும்**
**மறவியில் சிறப்பின் மாயமார் அனையை**
**முதல்முறை, இடைமுறை, கடைமுறை, தொழிலில்**
**பிறவாப் பிறப்பு இலை பிறப்பித்தோர் இலையே" பா.எண்: 3(69-72)**

இறைவன் தானாகத் தோன்றியவன். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யக்கூடியவன். ஊழியை அழித்தவனும் அவனே. அழித்த ஊழியை வராக வடிவம் எடுத்து மீண்டும் உருவாக்கியவனும் அவனே என்று ஒவ்வொரு பாடலிலும் இச்செய்தியினைப் பற்றி எடுத்துக் கூறுகிறது பரிபாடல்.

**வடிவமற்றவன்**

இறைவனுக்கென்று ஒரு தனி வடிவம் கிடையாது. மறைகளும், அன்பர்களும் பலவாறு வருணித்தாலும் இதுதான் இறைவனின் வடிவம் என்று அரிதியிட்டுக் கூற முடியாதவன். அன்பர்கள் மனதில் எவ்வாறு காண்கின்றார்களோ அத்தகைய வடிவத்தை உடையவன். வடிவமற்ற இறைவனை வணங்குதல் முடியும். உணர முடியும். அவனுடைய அருளைப் பெற முடியும்.

**தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம் நீ**
**கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ**
**அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ**
**வேதத்து மறை நீ பூதத்து முதல்வன் நீ**
**வெஞ்சுடா; ஒளியும் நீ திங்களுள் அளியும் நீ**
**அனைத்தும் நீ அனைத்து உட்பொருளும் நீயே” பா.எண் : 3(63-68)**

இங்கு இறைவனைக் காண முடியாது உணர மட்டுமே முடியும் என்பதை நன்கு அறியலாம். பல்வேறு குழப்பங்களுக்கு நடுவில் தெளிவடைவது போல இறைவனைப் பல்வேறு வடிவங்களிலெல்லாம் காட்சிப்படுத்திவிட்டு இறுதியாக நெருப்பு வடிவமானவன் இறைவன் என்பதையும் அருதியிட்டுக் கூறுகிறார் புலவர் கீரந்தையார். கடவுள் இல்லை என்பவர்களுக்கு கடவுள் உண்டு எனும் உண்மையைப் பறைசாற்றும் விதமாக வேள்வித் தீயில் இருந்து வெளிப்படும் நெருப்பே இறைவனின் வடிவம் என்றும் உரைக்கின்றார்.

**நட்பும் பகையும் அற்றவன்**

புராண இதிகாசங்களைத் திருப்பிப் பார்த்தோமானால், தேவர்களை ஒரு கூட்டமாகவும், அரக்கர்களை ஒரு கூட்டமாகவும் இவர்கள் இருவர்களுக்குள்ளும் பகையும் போரும் பற்றியச் செய்திகளை அறிய முடியும். புராணங்களுக்கு முற்பட்ட சங்க இலக்கியப் பாடலான பரிபாடலிலும் இப்பாகுபாடு பேசப்பட்டுள்ளது. என்றாலும், இப்பாகுபாட்டிற்குக் காரணமும் இறைவனே என்பது போல புலவர் எய்யினார் வானோர்களின் முதல்வனும் நீ, அவுணர்களின் முதல்வனும் நீ என்று கூறுகின்றார். இருவர்களுக்குள் இருக்கும் பகையினை மறைக்கக் கருதினாரோ என்னவோ உனக்குப் பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை என்றும் கூறுகின்றார். அறமும், மறமும் கொண்டு இருப்பவர்களுக்கு நீ இருக்கின்றாய். இல்லாரிடத்து நீ இல்லை. இச்செயல் தவிர உனக்கு நண்பரும் இல்லை, பகைவரும் இல்லை. நண்பர்களை நீ பாதுகாத்தலும் கிடையாது. எதிரிகளை அழித்தல் செய்தலும் இல்லை என்று கூறுகின்றார்.

**பல்வேறு திருப்பெயர்கள்**

இறைவன் ஒரு நாமத்திற்கு மட்டும் உரியவன் அல்லன். பல்வேறு திருப்பெயர்களைக் கொண்டவன். “தெய்வம் என்றால் தெய்வம், வெறும் சிலை என்றால் அது சிலை தான்” என்று பிற்காலப் புலவன் பாடிச்சென்றான். இவற்றிற்கெல்லாம் ஆதிமூலமாக பரிபாடல் இறைவனைப் பலநிலைகளில் பல நாமங்களில் வைத்துச் சுட்டுகிறது. பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களில் உறைந்திருக்கக்கூடிய இறைவன் ஒருவனே.

**ஆலமும் கடம்பும், நல் யாற்று நடுவும்**
**கால் வழக்கு அறு நிலைக் குன்றமும், பிறவும்**
**அவ்வவை மேவிய வேறு வேறு பெயரோய்!**
**எவ்வனியோயும் நீயே” பா.எண் : 4(64-70)**

**வழிபடும் முறை**

கரம் கூப்பி வழிபடுதல், குடும்பத்துடன் வழிபடுதல், சுற்றமொடு வழிபடுதல், இறைவன் இருக்கும் இடம் நோக்கி வழிபடுதல், திசை நோக்கி வழிபடுதல், தியானத்தின் வழி வழிபடுதல், மனமுறுக பாடல்பாடி வழிபடுதல் என பல்வேறு வகையான வழிபாட்டு முறையை பரிபாடலில் காணமுடிகிறது.

**முடிவுரை**

இறைவன் நாள், மலர், மேகம் போன்ற இயற்கை வடிவானவன். அவனுக்கென்று தனி வடிவம் கிடையாது. இறைவன் நிகரற்றவன். அவனுக்கு அவனே நிகர். பஞ்சபூதங்களும் இறைவனே. இறைவன் தானாய்த் தோன்றியவன். அவனுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. நண்பனும் இல்லை, பகைவனும் இல்லை. அவன் பல்வேறு திருப்பெயர்களால் அழைக்கப்படுகிறான். திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுதல் என்ற நிலையைத் தாண்டி இறைவன் இருக்கும் இடம் நோக்கி வழிபடுதல், திசை நோக்கி வழிபடுதல், நின்ற இடத்திலேயே வழிபடுதல் என இதுபோன்ற பல்வேறு இறைசார்ந்த செய்திகளைப் பரிபாடல் வழி அறியமுடிகிறது.